1027

ஸ்ரீராமஜெயம்.

இரமனூற்று,
மகாகடாசூடி வித்வசிகாமணியாகிய,

மணிமுத்துப் புலவர் பாடல்.

இப்புலவர் சிகாமணியின் சரித்திரச் சுருக்கமும்
தற்சிறப்புப்பாயிரமும்
இயற்றியவர்,

ஷை மணிமுத்துப்புலவர் அவர்கள் குமாரர்
முத்தையப்புலவர்.

இதனை அச்சிட்டவர்,
அம் முத்தையப்புலவர் அவர்களின் ஆத்மநேயர்,
திம்மு ரெட்டியார், ராஜாப்பட்டி.

1935.

கோவிற்பட்டி, சென்பகதேவி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

சிவமயம்

மணிமுத்துப் புலவர் சரித்திரம்.

பூமகள் முத்மெனப் பொலிவுற் றோங்கிய தென்னிந் தியாவில் எட்டயபுரமெனப் பட்டப் பேர்தரித்த சிற்றரசரின் ஓர் ராஜதானியாய் எட்டயபுரமென ஓர் நகரும் உளது. அந் நகரின் கீழ்பால் ஒன்றரை மைலுள்-உளதோர் சிற்றூர். அவ் வூரிராமனூற்றெனப் பேர் வாய்ந்துள்ளது. அவ்வூரினம் வசிக் கும் பரிவார குலத்தில், அக்குலத்திற்குத் திலகமணிவா போலும் சங்குமணியகாரரென்னும் பெயரினர் ஒருவரிருந் தார். அப் புருடரின் முதன்மனைவியாராகிய இராக்கம் மாளின் முதற் புத்திரராயவதரித்து முத்துச்சாமியென்றிடு நற்பெயர் பெற்று, சிறுவயதிலேயே கடிகையின் வமிசக் தினரான சுப்பிரமணியக்கவிஞரின் சிடராய்க் கல்வி பயின்று செய்யுளியற்றுதலின் மிகுவலனுனராய், அக்காலத் தெட யபுரத்தரசர் பெருமானின் அதிஜான இராமசாமிப் பாண்டியனெனுந் தமிழறிஞரால் மணிமுத்தனென்னும் பெயர் பெற்று, மண்டல மெங்கும் புகழ்பெற்று விளங்குவாராயி னர். அப்பால் இப்பெயரே நிலைபெற்றது.

இத்தகைய பெயர் பெற்ற புலவர், வாலிபதசையில் வியாபார வேலையிற் சிறிதயர்ந்தமை கண்டு பெற்றோர் சினந்து துரைக்கக் கோப சித்தராய்ப் பரங்குன்றத்தளவுஞ் சென்றனர். அங்[illegible] முன்னுமிழ்ந்த [illegible]லிற சிறிதாயுற்பவித்து இருந்[illegible] டேமிதாயவிட்டதுமன்றி வினுஞ் செலவிற்குக் காசில்லை.

ஆயினுந் தம்பால் நல்வைமிபெறாப் பெருங்கல்விப் பொருளிருக்கினிறமையால் தினைத்துணையும் மனத்துயரின்றி அப்பரங்கிரிப்பால குமாரன் மீது "பாலா சதங்கையணிகா லாகுழந்தைவடிவேலா பரங்குன்றனே" என ஈற்றடிகளைக் கொண்ட திருப்பதிகத்தைக் கோவிலின் முன் மண்டபத்திற் பாடிக்கொண்டிருந்தனர். அப்போது சிறுமதனினும் பேரழகுவாய்ந்தா ரொருவர் அங்கெழுந்து அப் பாடல்களை மும்முறை பாடும்படி கேட்டுச் சிரக்கம்பம் புரிந்து மெச்சித் தனது செம்பொற்கை நிறம்பச் செம்புக்காசுகளாகவே வாரியளித்து ஆலயத்துட் சென்றனர். அப்பாவிக் கவிஞர், ஆலயத்துட் சென்ற வள்ளல் மீட்டும் வருவாரென்று தெதிர்பார்த்திருந்தும் வராமை கண்டு தாமேயுட்சென்று தேடியுங் கண்டிலராய் இந்தப்பரிசளித்தார். சுருதிக் கந்தப்பனே யெனக்கருதிக் கசிந்துள முருகினர்; கண்ணீர் பெருகினர்; அப்பாற்றான் அப்பரிசுறு பொருளைப் பரிந்து நோக்கினர். அஃது தன் ஆறுறு செலவிறகு அளவுற்றிருந்தது கண்டு அகமகிழ்கொண்டு அக்கணமே தன்பதிக் கெழுந்தாங்கு இன்புற்றிருந்தனர்.

பின்னரும் அக்கடம்பன் கருணைத் திடங்கொண்ட இப்புலவர் பெருமான் தமது கல்வியின் பெருநிலாக் கதிர் விரிந்திலகுமாறு உலோக சஞ்சாரஞ் செய்வாராயினர். இவர் கனிவாய் திறந்து கவிசொல்லினரெனிற் கன்னெஞ்சரான வன்னெஞ்சரும் கசிந்துருகிச் சிரக்கம்பஞ் செய்தாட்டுவர்; அன்பு பாராட்டுவர்; செம்பொனள்ளி நீட்டுவர்; சீனி வாரியூட்டுவர். அன்றியும் இவர் தொடைமொழியடுக்கிச் சொல்லிடுந்திறத்திற் கடன்மடை திறந்த காவிரியன்னர். கடிகை வாக்கினும், கம்பள வாக்கினும் அதிகம் பலித்திடும் அருணிறை வர்க்கினர். 'தெய்வ மீகமேல்' என்னுந் திவ்விய கொவ்வைவாய் ஔவையாருரையைச் செவ்வையாய்ப்பிடித்தவர். எம்மதமுஞ் சம்மதங்கொண்டிவரியற்றிய தெய்வத்திருப்பாசுரங்கள் அளவிறந்தன.

ஒருக்கால் எட்டயபுரத்தின் கண் நமது தேசாபிமானியும் பாஷாபிமானியுமாகிய சுப்பிரமணிய பாரதியாரவர்கள், வைணவ சித்தாந்தமாக இப்புலவர் பெருமானியற்றிய பாசுரங்களைக்கேட்டுத் தமதுள்ளங் களிகூர்ந்து,

பந்தைத் தெறுமுலைமாப் பான்மொழியீ ரும்கரிய
எந்தைக்குச் சால இனிக்குமே — விந்தை

அணிமுத்துக் கோவையென அஞ்சொலிசை சேர்க்கும்
மணிமுத்து நாவலவர் வாக்கு.

என்றொரு வெண்பாவால் வியந்துரைத்துள்ளனர்.

மேலும் இந் நாவலர் பசுவந்தனைக் கைலாசபதியின் மீது "பரமனே பசுந்தை நாயகனே" என ஈற்றடியிற் கொண்ட நூற்றிலக்கப் பரசுரங்களியற்றியபோது திருநாவுக்கரசு சுவாமிகள் "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" எனத்திருத்தாண்டகத்திற் றிருவாய் மலர்ந்தவாறு ஆனையெனப்பலவருமாறு பாடவல்லீரா? எனக்கேட்டார்கு அவனருள் கொண்டு பாடுவேன் என்றுடனே,

"ஆடானை யமர்ந்தானை யாரூரானை ஆனைக்காவானை மனதன் பிலாரைத் தேடானைத் தெளிந்தானைத் திருவிளனைச் செகமுழுதும் படைத்தானைத் திருந்தார் போரில் ஓடானை யொழியானை யொளியுள்ளானை உமையொருபாகத் தானை உருவில்லானை நீடானை யுரியானைப் பசுந்தையூரில் நின்றானை யெப்பொழுதும் நினைகுவோமே" எனவும், "கல்லாலில் அமர்ந்தானைக் கடுவுண்டானைக் காலனைப்பண்டுதைத் தானைக் கடவூரான எல்லாந்தானனை யெம்பிரானை இமையவர் தேடரியானை யேறார்ந்தானை வல்லாளன்றிருமகவாய

வந்திட்டானே வடகயிலே மலையானே மதுரையானைக் கொல்
லாத விரதியினைப் பசுந்தையூரிற் குடியானே அடிதொழு
தென்குறை தீர்த்தானே." எனவும்,

கல்லானே கரும்பருந்த அருள் செய்தானைக் காரானே
யுரித்தானைக் கனகமேரு வில்லானே வல்லானே நெடுங்
காண்டீப வில்லியோடும் அமர் பொருதும் விஜயத்தின்
டோள் மல்லானே கல்லானே மாசில்லானே மாமறைக்கும்
எட்டானே வணங்கிடார்பாற் செல்லானைத் தென்பசுந்தை
யூரனைச் சிந்தித்தா லெத்துயருந்தீராமே." எனவும்,

கேட்டோருள்ளம் கனிந்து வியப்புறப்பாடினர்.

இன்னும் இவ்வருணிறை கடாவுதித் திருந்தமிழ்ப்
பாவலர் கோசுகுண்டு என்னும் நகருக்குச்சென்று அங்கர்
வாசிகளாலுபசரிக்கப் பெறுங்கால், அவ்வூரில் ஓர்வைசிய
குலோத்தமரான அருணைசலஞ் செட்டியார், இக்கவிவாண
ரை நோக்கிக் கவிவல்லீர்! தங்கட்கு மரியாதை செய்ய என்
கைவசம் பணமில்லையே எனக்கவிஞர் அக்கணமே "னக்கவசம
இல்லையெனிற் பைவசம் இருக்கும் என்றுரைப்ப அந்நாள்
முதல் அவ்வணிகர் பைவசம் முத்தையர் பணம் பெற்றுய்ந்
தனர்.

அன்றியும் மாசாருபட்டியில் ஓர் கம்மவார் நாயக்கர் உலோபமே லீட்டால் உரைத்த கடின வார்த்தையைக்கேட்டு இக்கலிவாணர் கடுஞ் சினங்கொண்டு "எண்ண அரைலக்ஷ மிருக்கே உனக்கேன் பிடித்ததிந்தக்கிறுக்கே" என்றார். என்றவண்ணமே கூடுதல் குறைதவில்லாத அரைலக்ஷந்திரவியத்தோடு கிறுக்கையும் அவராயுள்காரும் அனுபவித்தனர்.

இத்தகைய சம்பவங்கள் எத்தனையோ நிகழ்ந்துள்ளன. அவை எம்மனோரால் எழுதுதற்கும் இயம்புதற்கும் எண்ணுதற்கும் அடங்கா. இவை நிற்க,

இத்தகைய மதுர வித்தகக் கவிஞரின் வாசஸ்தலமாகிய இராமனூற்றே தமது வாசஸ்தலமாகப்பண்டு கொண்டு நிகழ் காலம் எட்டயபுரத்தில் வாசம் செய்கின்ற பஜனே முத்தப்ப மணியகாரர், இவரது சீடர். இவர் குருபக்தியின் முதிர்ச்சியாற் கல்வியும் முதிர்ச்சிபெற்றனர் என்பது இக்கவியாற் போதரும்.

"திருமாது கேள்வனடி சிந்தித்தென்றும் செயற்கரிய செய்கை செய்து ஜெனனத்துன்பம் மருவாது வளர்பரம பதமடைந்த மாதவர்நற் சரிதைசொல வாமுந்தும்

இருபோதுந் தனைமறவா இதையந்தந்தும் எனைத்தனதுதாச
னென்றே ரின்பந்தந்த குருநாதன் மணிமுத்து பதம்
பணிந்து கொண்டுவகை கொண்டுதிடங் கொண்டுய்வேனே"

இஃது அச்சிடர்தாமே யியற்றிய குருவணக்கம்.

இத்தகைய துதிபெற்ற குருநாதனுகிய மணிமுத்துப்புலவர், தம்மின் மிக்கார் ஒப்பார் இழிந்தார் எவர்வரினும் " கற்றுரைக் கற்றோரே காமுறுவர் " என்னுஞ் சுருதிக் கிணங்கப் பேராவலோடு தழுவிப் பெருமைப் படுத்துவதே இவரியற்கைக் குணமா யமைந்திருந்தது. " ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே " என்ற வாக்கியத்திற்கும் இவரே சாகி யெனத்தகும் சற்குணப் புலவர்.

ஔவையார் " திருமாலுக்கடிமை செய் " என்ற மொழியினை மோக்ஷவழி யெனக்கொண்டு உப்பூற்றூர், வரதராஜப் பெருமாள்மீது பக்தியென்னும் பால்பொங்கி வழிதல் போலும் " வரதராயா அழகுதுளப மாயா லவணமாகியில் வளருமாலே " என்றீற்றடியிற்கொண்ட திருப்பதிகம் பாடியும் அப்பெருமாள் கோவிலிற் சாளக்குத் திருப்பணி யுண்டுபண்ணியும் அத்திருப்பணி யெக்காலத்தும் நடை

பெறுமாறு நிலோபயம் புரிந்தும் "சகடுதைத்தநாளாவனக் கடுமையாளாக எண்ணுனது தாசரொடு கூட்டு கண்டாய்" எனத் தாம்பாடிய லவணமாநதிப் பதிகத்துட் "கமல நயனு" வென்னும் முதற் குறிப்புச் செய்யுளிற் பகர்ந்த வாறிப்பதவியையே விரும்பிய திரிகரணசுத்தராகிய இப் புலவர் பெருமான் புத்திரர் பௌத்திரர் புரியும் பணிவிடையைப் பெற்று நல்வாக்கும் வாக்குப் பலிதமுங் கொடுத்து காராயண மந்திரமே நயந்த சிந்தையராய் எழுபத்து நான்கு வயது வரையினும் இக சுகம் அனுபவித்துப் பின்னர் பின்வருமாறு முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யம் பெற்றனர்.

சாலோக பதவி.

ஆயிரத்தோடொரு நூற்றுநாலாமாண்டில் அழகு கும்பரவியிருபத்தைந்தாந்தெய்தி தூயகவித்திருவாரங் கிருஷ்ணபக்ஷத் துலங்கு துவாதசி துளபமாயோன் நன்னாள் ஆயதவப்புனிதனினத்தரிமெய்த் தொண்டர் அருகோடி யொருகோடியன்பிற் சூழப் பாயகுவலயம் புகழும் மணிமுத்தெங்கை பச்சை முகில் வாழ்பரம பதம் பெற்றாரே.

சாமீப பதவி.

அஞ்சக்கரத்தர் மூவருமோர் அமிசத்துதித்தாரெனப் பரனி நெஞ்சக்கமலப் பூந்தனிசின் நிறுத்துங்குணனம் மாலயத்தும் கஞ்சத்திழைத்த சரணிளக்கிற் கஞ்சத்திழை யிட்டானறுமெய் விஞ்சப்பொழிந்த செழுஞ்சோதி விளக் கப்புரிந்த திருப்பணியான்.

நமதற்புதஞ்சேர் திருப்புகழே நனில் நாவலவன் மாமணிமுத் தமரக்கிரிகைக்குவர்நீர் கொண்டாட்டல் சரி யன்றெனத்திருமால் கமலப்பிரமன்றனதுதிருக் கழற்கால் கழுநீர் பொழியவது குழுறிக் குழுறிக் சுனைவெரிகுளிரப் பொழிந்த தருண்மழையே.

பாலும் பழுத்த பழரசமும் பளிதவனைகயுஞ் சருக் கரையும் மேலும் புதிய செழுந்தேனும் விண்ணோரமுதும் விரவு சுவை போலுமினிய தமிழ் மாலை புனையுந்தொழும் பன்மணிமுத்தே சாலும் மதுர கவிஞனெனைத் தாமோதர னும் மிகவிரும்பி.

கானுர்துளப மாலிகையும் கடவுட் கவுத்வ மாலிகை யும் வானுடையரனுதினமும் வனையுந்தருவின் மாலிகையும் தானேதயங்குந்திருமார்பிற் றணிமாமணிமுத் தெந்தையுள் றன் தேனுர் மொழியிற்றெரிந்த தமிழ்த்தெரியல் புனைதற் கழைத்தனனே.

அருணன்கொழுகு திருவிழியும் ஐந்தாபுதமும் மழைமுகிலின் வருணங்கனிந்த தவவடிவும் மணிமாலிகை யும் பசுந்துளவும் தருணந்தனின் மெய்யடியவரைத் தாங் கும் வரதாபயகரமும் கருணைமிகும் பொற் கருடன் மிசை காணும் பெருமை கிடைத்ததுவோ.

கோளாய்ந் தொழுகுமாமன் விடு கொடும்பூதகியினுயிர் குடித்துத் தூளாயுதிரச்சகடுதைத்த சுருதிகமழும் பசுந்துள வத் தாளாளனுயுன் ஆளாகத் தாசர்குழுவிற் கூட்டுகென மீளாவரம் முன்கேட்டபடி மேலாம்பதவி கொடுத்தனனே.

நாலுந்திருவாய் திறந்துமறை நாலுந்துதிக்கும் பொருளாதி மூலமெனமுன் னேலமிடமுந்நீர்குடித்து முழங்குமுகில் போலுமெழுந்த திருக்கோலப்புனிதக் காஞ்சிகொடுத்தினி யெக் காலுமருகேயிருக்கவெனக் கமலத்துவர்வாய் மலர் ந்தனனே.

சாரூப பதவி.

புகழுடம்பு பெற்றபிரான் புலவர்பிரான் மணிமுத்து புனித மாயோன் திகழுடம்பு பெற்றெழுந்த திருநாளைக் காண வந்த தேவர்கூடி மகிழுடன் பாடொடுதேவ தருவினது மலர்வாரிப் பெய்தமாரி அகழுடையம் புலியில்விழாதா காயத் தெழுமீனைடமர்ந்ததம்மா.

சாயுஜ்ய பதவி.

தேக்குந்தமிழ் வாரியமுதம் திரட்டித் தெவிட்டும்படியூட்டும் வாக்கு மதுரம்படைத்த பிரான்மணிமுத்தினையங்கசிந்துருகி நாக்குத்தினமும் தழும்பேற நாராயண மந்திரஞ்செபித்துப் பூக்குங்கருணைச் சுயஞ்சோதி பொங்குஞ் சுடரிற் கலந்தனனே.

ஊழியா யோதலோர்
நாழியாநாளெலாம்
ஆழியான் ஆழருள்
வாழியே வாழியே!

தற்சிறப்புப்பாயிரம்.

சரஸ்வதி துதி.

அருமறையின் முடியாளை ஐந்தருவும் முடித்தாளை யருமையாளை
ஒருகபடும் படியாளை உபநிடதம் படித்தாளை யுருவில்லாளைப்
பருவவினம் பிடியாளைப் படிகவடம் பிடித்தாளைப் பதுமத்தாளைத்
திருவளர்வெண் பொடியாளைத் தீவினைகள் பொடித்தாளைச்
சிந்தை செய்வாம்.

தற்சிறப்புப்பாயிரம்

கோட்டிலே சிறந்த பொதிகைமால் வரையிற்
குறுமுனி யருளினும் பிறந்து
எட்டிலே வைகை யாற்றிலே தவழ்ந்த
இருங்கலி மகட்கிருப் பிடமாம்

தேட்டிலே பயிர் தடாதகை பணிந்தேத்
திருமண மாலிகை புனைந்த
நாட்ட மூன்றுடைய சுந்தர னாசு
நாட்டிய பாண்டி நன்னாட்டில்

சிகர கோபுரப் பொன்னுலயம் பலவுஞ்
செம்பொனு டாங்கு மம்பலமும்

மகர தோரணங்க ளிலங்கிடு மாட
வரிசையும் வரிசையாய் நிறைந்து

நகுமண மலர்க ணிறைந்த பூஞ்சோலை
நாற்றிசையினும் புடை பரந்த

ரகுகுல திலக விஜயவில் வீர
ராகவ தடாகமொன் றுண்டால் (1)

அத்திருத் தடாகத் தறம்பல புரிந்து
அச்சுத னுமமே முழக்குஞ்

சித்திர மிகுந்த சங்கமொன் றிருந்து
செழுந்தமிழ் வளம்பெறக் கனிந்து

புதுமுத னவின்ற னிசையொடு பயிலும்
புகழொளி மிகமிகப் படைத்த

சுத்த மெஞ்ஞான நிறைந்த சிங்கார
சுடர்மணி முத்தையன் றுவால். (2)

அம்மணி முத்தாற் கோத்த வணிமணிப் பதிக மாலை
அம்மணி வடத்தும் வேட்கை யதிகமுற் றணிவன் செம்
அம்மணி மிருதுபாஷை யதனினுமினிது கேட்பன் [பொன்
அம்மணி வண்ண னென்ரு லரும்பெறற் புகழ்வே றுண்டோ. (4)

சந்தழல் வேள்விகள் புரிந்தும் கடவுட் கங்கைச்
செழுமல ரோடையிற் படிந்தும் தலங்கள் சென்றும்

சந்ததமுந் தவம்புரிந்தும் விரதயோக
சாதனையே தினம்புரிந்துஞ் சலித்தல் வேண்டாம்

எந்தை மணிமுத்து பரிசுத்தமாக
இயம்பிய பைந்துளபமால் பதிகந் தம்மில்

சிந்தை கனிந்துருகி யொருமொழி சொன்னலுந்
திருவாங்கப் பரமபதஞ் சித்தியாமே. (5)

லவணமாநதிப்பதிகம்.

விநாயகர் துதி.

இதழிதாதகிசூடி அரவமாலிகையணிந்
திளமதிமுடித்து வெள்ளை

இடபமேறிச்சுவண வடவரை வளைத்தவணை
செயில்பொடி படுத்திவிசய

மதகரியுரித்துவிரி புலியுடை தரித்துரதி
மதனையும் எரித்துமேதி

மறலியையுதைத்துமுய லகனையுமித்துரா
வணனையும் அடர்த்துநெடிய

நதிசடா முடிவைத்து வாமபாகத்திமைய
ராஜபுத்திரியை வைத்து

லவணமாநதிவந்த சிவணவண்ணப்பவள
நம்பிரானம்பிகைசுதன்

விதியும்வானவரும்நான் மறையுமூவுலகமும்
வியந்துதாழும் வலவைபாகன்

வேழமாமுகவனிரு சரணமலரென திதைய
மென்முளரிமலரிலுளதே

கமலநயனமெடிய வுரகசயனவிசய
காரிங்கநிர்த்தனதண்

கனிகை செங்கரமீது கொண்டகோவர்த்தனு
கடல்வண்ணு செகமோகனு

அமைமெயன வுதித்தபூ தகிமுலைப்பாலுமவள்
ஆவியும் பருகியுண்டுண்

டழலுண்டு புவனமுண் டண்டமுண்டுலேறி
யாயருறி வெண்ணெயுண்டு

தமதனைய சோதைகை யடியுண்டுமருதாடு
தவழ்ந்து முன் சகடுடைத்த

தாளாவுனக்கடுமை யாளாகுவேனையுனது
தாசனொடு கூட்டுகண்டாய்

வமிசரவிகுலமணீ இ பண்டுகோதண்டமது
வாங்கி ராவணனைவென்ற

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (1)

ஆலிலையினுஞ்சர்ப்ப சயனத்தினுந்திரு
வரங்கத்தினும் நெடியபா

லாழியினும்வேங்கடந னகரமுதல்தூற்றெடெட்
டமுகிய திருப்பதியினும்

பாலனையமெய்த்தொண்ட ரிதையபதுமத்தினும்
பகிரண்ட புவனத்தினும்

பழமறையின்முடிவினும் எனதிதையநடுவினும்
பல்காலும் வளர்தெய்வமே

ஞாலமிசையின்னமொரு மாதாகருப்பைக்கு
ணன்புகா தருள்புரிகுவாய்

ராகவைகுந்தனே சீதரமுகுந்தனே
நாரணு கோவிந்தனே

வாலமன்மதனினும் விசாலமன்மதனென
வியங்குருக்மணி சமேதா

வரதராயாஅழகு தளபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (2)

அருணசாரதிகடவு பரியினுங்கோடிபங்
கதிகவேகம்படைத்த

அநுமதுவசம்பெற்ற விரதமுறும்வெண்கொற்ற
வசுபங்கடாவியமரில்

வருணராஜன்மதலை யமராபதிக்குரிசில்
மதலைமார்பிடையெறிந்த

வன்கதைகொடேவிடு மவன்சிரம்உடைந்துவய
வார்சிலைக்கரீடியுய்யக்

கருணைபுரியுங்கடைக் கண்ணுயெனைக்ககைட
கண்பார்க்கவிதுசமயமே

கலைதிருடியுயர்குருந் தேறியபதாநிணங்
கமழ்நெடியபஞ்சாயுதா

மாணஜெனனங்களினி வாராதுநின்பதம
மலரடியில் வைத்தாளுவாய்

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (3)

பூமிநான்மறைவானம் நாகருலகந்தொழும்
புங்கவாகங்கை கமழும்

பொற்பதாவற்புதா கற்பகங்கவர்கரா
புயல்வணுபக டேறியே

ஏமன்கடுங்கயி றடுங்கதைநெடுஞ்சூலம்
எமபடா லொடுமூனேந்தே

இங்குருமுனமுதிய பங்கயாதனனியருள்
எந்தையே சிந்தைகனிவாய்

நேமித்ரோணந்தண்டு சங்கம்வாளிவைகொண்டு
நிமிடத்தி லுவணத்திலே

நினதன்பர்புடைசூழ மனதன்பொடெனையாள
நீயெழுந் தருளவேண்டும்

மாமிதும்பூமிணும் கோபியரும்சாதா
மடந்தையுஞ் கொஞ்சும்வலவா

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாதியில் வளருமாலே. (4)

அரவணைகடந்துதச ரதன்மதலையாய்மிதிலை
அரசர்குமரி யெனிவாகம்

ஆகமவி திப்படி மணந்தபின்சிற்றன்னை
அருளிய மொழிப்ப்ரகாரம்

திருவொடுந்தனதிளைய தம்பியொடும்கடியகைச்
சிலையொடும் பகழியோடும்

சீரைசுற்றித்தண்ட காரண்யமிசைசென்று
திரிசிராகர தூஷணர்

சிரமதுதடிந்துவரு வீடணர்க்கழியாத
திகழ்சிரஞ்சீவி நல்கித்

தியராவணகும்ப கருணனிந்திரசித்து
தெம்மூல பலரைவென்ற

வரைநெடும்புயவிஜய ரகுநந்தனஜெண்ம
மாற்றியெனை யாண்டருளுவாய்

வரதராயாஅழகுதுளப மாயாலவண
மாநதியில் வளருமாலே. (5)

கௌரவப்படைகளும் பாண்டவப்படைகளும்
கைகலந்திடு மண்டமர்க்

களத்தினின்மறைத்திடு சயத்ரதனைத்தலை
கணத்திடை துணித்தேவினுல்

குவலயத்துற்றபஞ் சகமடுவிலேபெற்ற
குமரன்முடி கொய்தோன்முடி

கூருகவெண்ணிமா தவமியற்றியதாதை
கொற்றக் கைமீதிலற்ற

அவன்முடியடைந்திடவும் இவன்முடியுடைந்திடவும்
ஆழியாற் கதிர்மறைத்தே

அர்ச்சுனன்சபதம்நிறை வேற்றியவெனப்பனை
அரவணைச் செல்வாமணி

மவுலிபோய்வண்டுவரை வாசாயெனக்குனது
மலரடி கொடுத்தாளுவாய்

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாருதியில் வளருமாலே.

(6)

அண்டருலகத்தவரும் அம்புவிவசிப்பவரும்
அரவநாட் டவருந்தொழும்

அரியேசராசர மனைத்தும்பயந்திட்ட
வச்சுதா வாழியின்ற

பெண்டினியநாயகா சத்யபாமைக்குரிய
பிரியநாதா நாயினேன்

பெரியபிழையாவும் பொருத்துமெய்த்தொண்டரொடு
பிள்ளையெனை யாளவேண்டும்

பண்டரிபுரந்திரு வரங்கம்வடவேங்கடம்
பத்திராசல மயோத்தி

பாலவாரிதிசர்ப்ப சயனம்வடவாலாயர்
பாடிபொ னரித்துவாரம்

வண்டுவரைவடமதுரை வைகுந்தமன்பருள
வனசமல ரினும்வசிக்கும்

வரதராயாஅழகு களபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (7)

வறுதராப்பாத்துவளர் தானிசாதிரவியமோ
ராறுலட்சம் வராகன்

ஆலயஞ்சிலாமர் ஜானகியிலட்சுமணர்
அநுமர் சுக்ரீபர்முதலாம்

மெய்விரதருயர்பரதர் சத்துருக்காழ்வாரின்
விக்ரகமெலா மமைத்து

வேணதிருவாபரண முஞ்செய்துபூசனை
விதிப்படி நடத்திவந்த

செய்வளருயர்ந்தபத் ராசலத்தாசில்தார்
செய்கையை நபாவறிந்து

திடவிசாரணைசெய்து தண்டனைகள்செய்தும்
சிறைச்சாலை யதனில்வைத்தும்

மைவளருமேனியாய் பனிரண்டுவருடமும்
வராதிருந் தாண்டுகொண்ட

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (8)

மாசிலாவயவிர த மன்னவர்சிகாமணி
வள்ளலே யெனையாள்பவா

மாணிக்கதீபமே பச்சைத்திருத்துழாய்
மாலிகாபரண மணியும்

தேசுலாவியவயின தேயன்மிசைவருபவா
தேவதேவா முராரி

சீர்பாதகமலத்து மெய்யடியருழியன்
சிறுவன் மணிமுத்துநிருபம்

பாசம்பிடித்துவாள் கதைகொண்டுசூலமும்
பற்றிவெம்பக டேறியே

பாரமலிபோல்மறலி வாராமுனம்பரம
பண்டிதா யெனையாளுவாய்

வாசம்பெருந்துவரை வாசனைவைகுந்த
வாசனே ஜெகதீசனே

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாநதியில் வளருமாலே. (9)

தென்றிசைநமன்பதி புகுந்துவெண்சங்கம்
செழும்பவள வாயில்வைத்துத்

திசையனைத்துஞ்செவிடு மண்டிடமுழக்கம்
செயும்போது மறலிபதறி

மன்றலந்துளபமணி மாதவாவபயமென
வந்தடி பணிந்துநின்று

வரலாறுவினவவவர் குருமதலையைக்கொண்டு
வருகவென மனதிசைந்து

கன்றுகொடுதான்றுவிள வின்கனியெறிந்திட்ட
கணபிரான் முன்பழைப்பக்

கடிதிலச்சேயினைக் குருமனவிதிருவுளங்
கனிவுகொள நல்குமுகிலே

வன்றிரல்படைத்தஜெய மாதவாநின்சரணம்
மலரடி கொடுத்தாளுவாய்

வரதராயாஅழகு துளபமாயாலவண
மாநதியில் வளருமாலே (10)

முத்திருத்தும்தொண்டர் சித்தம்நித்தந்தங்கும்
முக்கணன்வடகயிலையும்

முளரியந்தவிசுறையு மலரயன்பதியளகை
முகிலூர்திநகரமுதலாம்

எத்தலமும்இணையிலா லவணநிகருறையும்
எம்பிரான்வரதராயன்

இணையடித்தொண்டன்மணி முத்துகூறியபுன்சொல்
எப்படியிருந்தபோதும்

வித்துவசிரோன்மணிக ளேதங்கள்திருவுளம்
வியந்துமன்னிக்கவேண்டும்

வித்தைமாசில்லாது கற்கவல்லனல்லன்
விண்டுவின்பாமாலையிப்

பத்துந்தினந்தொறும் கற்றவர்கள்பால்பவுசு
பாக்கியம்பெற்றுமோட்ச

பதவியும்பெறுவரிது சத்தியம்சத்தியம்
பச்சைமால்திருவாணையே (11)

சீதரதடாகப்பதிகம்.

கனவினுமெனினைவிலொரு கணமுமகலாத
காயாவின்மாமலர்வண்ணனே

காங்கேயருக்குமுனம் வசுவதம்பெறவருள்
கடாக்ஷித்தகருணை முகிலே

இனியபைந்தெள்ளமுது பாற்கடல்கடைந்தமர
ரினமுணமுனங்கொடுத்த

ஈசனேபரமபத வாசனேராஜனே
யெட்டிலக்குமிநேசனே

மனதொத்தபத்தினியும் மதியும்மைந்தருநிதியும்
மார்க்கண்டதீர்க்காயுளும்

வானநதிபைந்துழாய் வேதமுங்கமழ்பாத
மலரைமறவாதமனமும்

தினமும்நின்னடியார் திருத்தொண்டியற்றிடும்
தெளிவுமெஞ்ஞானவீடும்

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாகமாலே.

நீலமலைபுங்கடலும் முகிலுமஞ்சனமுகெடு
நீலமணியுங்களாவும்

நிகருமெய்யாதுவரை வன்ருமையாதிருவை
நெஞ்சிடைபதித்ததுய்யா

பாலதெண்டிரையினும் பச்சையாலிலையினும்
பழவடியருள்ளத்தினும்

பாம்பின்படத்தினும் நூற்றெருடெட்டுத்திருப்
பதியினும் நடிக்குமாயா

மாலாகிமெய்த்தொண்டர் ஐம்படைகவுத்வமணி
வயினர்பொற்பீதாம்பரம்

மார்பமொடுபுயமுநூல் குண்டலகிரீடமுக
மண்டலங்கங்கைதுளபம்

சீலநான்மறைமணங் கமழ்பதாம்புயமுமென்
றிருவுளக்கோவில்வந்து

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சித்ரதடாகமாலே. (2)

சீதரதடாகப்பதிகம்

வண்டுதேனுண்டுவகை கொண்டுவாய்விண்டுகவி
வாசிக்கு மலர்மாலையாய்

வச்சிராயுதனுமா மலரயனும்வானவரும்
மாமறையு மறியொணாத

புண்டரீகக்கணை புயல்வண்ணமணிவண்ணை
பூமாது புல்லும்புயா

புரமெரித்தவனையமர் பொருதும்விக்ரமவிஜய
புனித வுத்தமவிசால

பண்டைமாதவமுற்ற அண்டர்கோவும்பெற்ற
பாலன்விற் பகழிகோத்த

பாரதத்திடையழகு கோங்கடத்தியபரிப்
பாகாகளா வின்வாகா

செண்டுமூலமாதர்மயல் கொண்டுகிரிகின்றனன்
சித்தம் திருத்திவிடு

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாகமாலே.

(5)

மண்டுபோரிடைவெகுளி கொண்டுவரிவிற்கொண்டு
வடிவாளி துடியாகவே

வாரிவாரிக்ககன மாரிபோலேவிஜய
வாசவன் குமரனேவச்

சண்டன்மாமதலைதட மார்பமுழுதும்கண்கள்
சல்லடை களாயிரத்தம்

தரைமேல்வழிந்திடச் சுடர்மணித்தேர்மீது
சாய்ந்து தளர்வுறுகாலையில்

அண்டையிலடைந்துமுனி வடிவாகியறமெலாம்
யாசித்துமவன் மனம்போல்

அதிதியுமீகையும் கருடன்றிருத்தோளில்
அழகியதிருக் காக்ஷியும்

திண்டிறல்பெறத்தந்த சேவகாசரணநின்
றிருவடிப்போ தெனக்குச்

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாக மாலே. (4)

அஞ்சுராசர்க்குந் திருத்தூதுசென்றுவிது
ரன்மனையி லமுதுண்டவா

அரவதுவசனெவென்று தருமன்மணிமுடிசூட
அத்தினபுரந் தந்தவா

கஞ்சனெவியகொடிய குஞ்சரம்சகடுபொடி
கண்டுபேய் முலையுண்டவா

கற்பதாருவைமுன்பு சத்தியபாமைக்குக்
கவர்ந்திடு மணிக்கரதலா

யஞ்சபாதகனையிக் கடையவனினதுபய
பாதந் தொழாஞையினைப்

படிறனைத்தருமசிந் தனையிலாமூடனைப்
பார்க்கொரு பெருஞ்சுமையனைச்

செஞ்சிலைப்புருவமட மங்கையர்திருத்தொண்டு
செயுமெனை வணக்கிவீடு

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாக மாலே. (5)

கோடேறுநீள்கவ்வைக் கொம்பேறுமெண்ணும்
கொற்றமேரிட விரட்டைக்

கூமேறுகெடுநீல நிறமேறவழகிய
மாளமேறக் கருத்திற்

சூடேறவருமெருமை மாடேறுமறலிவிடு
தூதர்கதை பாசங்கொடு

சூலம்பிடித்தால காலங்கொதித்ததென
மேலுந் தொடர்ந்துவருநாள்

தோடேறுமதுமலர்த் தொடையேறுகொடியைநீர்
துளவேறும் அழகுகங்கை

சுருதியேறும்பாத மூறுதியாகத்தந்து
தொண்டர் கூட்டத்தையாள்வோய்

செடேறுமருமலர்த் திருவேறுமார்பனே
தேவனே முத்திவிடு

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சிதரதடாக மாலே. (9)

புரமுருவவடவரை யெடுத்தவடகயிலாச
புங்கவன் முனங்கொடுத்த

புலவுவடிவாளுருவ அட்டதிசைவாரணம்
பொருதமார் புருவம்பொன்

வரைநிகருமிருபது புயம்புகுந்துருவநவ
மணிமகுட முடிகளுருவ

மாசிலாவரமுருவ வீரமுருவக்குமுத
வாய்தந்தம் நாவுமுருவக்

கரமுருவளமதுஜெக மாதாவைஇச்சித்த
கண்ணுங் கருத்துமுருவக்

கணைகடாவியவிஜய ராகவாசரணம்நின்
கழலினைப் போதிரண்டும்

சிரமிசைபொருத்திடும் திருநாரணனது
திருவடிப் பதுமவந்து

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சித்ரதடாகமாலே. (7)

மந்திரசொரூபமுள புரவிபூட்டியகந்த
வாகத் தடந்தேரினே

மாதலிசுதன்கடவ வாசவகுமாரனெடும்
வாளகிரியைக் கடந்தே

அந்தகாரப்பெரிய மண்டபத்தூடுகதி
ராழிவழி காட்டவேகி

யழகியசுயஞ்சோதி வட்டம்புகுந்துதெள்
ளமிர்தப் ப்ரபாகநடுவோர்

சுந்தரத்திருநகரில் அரவசயனத்தின்மிசை
தொண்டரோ டுறையுமிறையைத்

தொழுதுமறையவர்பிள்ளை பத்தையுந்தந்துபைந்
தூவைநாக ரம்புகுந்த

செந்திருமணாளனே யானனதடைக்கலம்
ஜென்மந் தடிந்துழுத்தி

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சிதரதடாக மாலே. (8)

ஆடகன்றனையிரணி யாசுரன்றனையேன
மாகியாளரி யாகியும்

ஆளியுண்டோய்சரணம் எழையென்பழினை
யனைத்துந் தடிந்துழுத்தி

வீடுபெறுமெய்த்தொண்டர் நடுவில்லைத்திடமனம்
விருப்பமுறு வாய்சுவாமி

வேலைபோலும்பிறவி வேலையிலழுந்தியிது
வேலையாகத் திரிந்த

மூடனுகினனுய்ய வினியாவதுனதிதைய
முளரிமல ரிளகவேண்டும்

மூவுலகமும்பெற்ற மலருறையும்வேதாவை
முன்பெற்ற திருவுந்தியாய்

சேடசயனத்தின்மிசை பள்ளிகொண்டோயுனது
திருவடிப் பதுமம்வந்து

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சிதர தடாகமாலே. (9)

பத்தாபிரிந்ததென ஆகமம்வித்தபடி
பரமபத மேபுகுந்த

பத்மாபதிக்குயிர் தருந்திருப்பாற்கடற்
படவரவ பஞ்சணையுள

கத்தாவுனக்கபய மின்னமுஞ்ஜனனவெங்
கடலிடை யழுந்திடாதுன்

கழலிணைக்காளாகி யெளிய னுய்யும்படி
கடாக்ஷம்வைத் தருளவேண்டும்

அத்தாசயஞ்சோதி யப்பாவடத்துறையும்
அண்ணு வைகுந்தநிதியே

அரிநாரணஎக பரிபூரணச்சச்சி
தானந்த வடிவமான

சித்தாதொழுஞ்சீவன் முத்தருளமகலாத
தீபமே முத்திவீடு

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதர தடாகமாலே. (10)

அழலுண்டுபுவியுண்டு தயிருண்டுகவரீதம்
அள்ளியுண் டண்டமுழுதுண்

றன்றுலாகலமதிற் கட்டுண்டுமருதுசக
டானேபே யாவியுண்டு

குழகுறுமசோதைகை யடியுண்டுவிதுரனுறை
கோவிலில் விருந்துமுண்டு

குசேலர்தரும்அவலுண்டு கடல்கடைந்தமுதுண்ட
கோவலா சுரபிதிருடும்

முழுமறையினயன்வந்து திருவடிதொழுந்திரு
முகுந்தாமுன் வனவேடனே

முனிவனுகச்செய்து முத்திதந்தருளிய
முராரியுன தபயமுனையே

செழுமனக்கனிவுகொடு சிந்திக்கின்பதத்
தெய்வீக முத்திவீடு

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதர தடாகமாலே. (11)

சந்திரசடாமவுலி அரனுநீமலரி லுறை
தாமரைப் ப்ரம்மாவுநீ

சதாசிவனுநீமயேஸ் சுரனுநீ அரியுநீ
சத்தி மாதாவுநீவிண்

ணிந்திராதியருநீ இந்துசூரியருநீ
இதர தெய்வீகமும்நீ

எனதெனுமகந்தையென திதையத்திலுதியாத
யித்திருவரப் ப்ரசாதம்

தந்தகுலதேவுநீ தந்தைதாய்தமருநீ
சற்குருவுநீ மெஞ்ஞான

சச்சிதாநந்தபர தேவுநீஎனதிதையத்
தாமரைப் பொருளுநீயே

சிந்தைவனசங்கனிந் திந்தவேளையி லனது
திருவடிப் பதுமம்வந்து

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சித்ரதடாக மாலே. (12)

அந்தகனெங்கரும்வரி சிலைவேடனல்வெருவி
அபயம்புகும் புருவக்

காகங்கனிந்துதன துடலந்தடிந்துதரும்
ஆதித்தன் மரபில்வந்த

சந்தரசொரூபனே மாயாவுதாரனே
துளபமாலிகையுளானே

சுருதிதேடரியவா முகிலினுங்கரியவா
தொண்டரன்பிற்குரியவா

இந்துசூரியராகி யைந்துபூதமுமாகி
யெப்பொருளு மாகிநின்ற

எம்பிரானெயமார் தம்பிரானேதொண்ட
ரிதையத் தமர்ந்துளானே

சிந்தைமென்மெழுகிற் கசிந்துருகுமானந்த
தெள்ளமுத வெள்ளமுத்தி

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதர தடாகமாலே. (13)

பாரதப்பேரமரில் வில்லெடேன்னென்றவுயர்
பற்குனன் மனந்திருந்தப்

பண்டுபகவற்கீதை விண்டஜெகஜோதிப்
பரந்தாம யாழில்வல்ல

நாரதப்பரம்மரிஷி முதலாயமுனிவரரும்
நண்ணரிய வண்ணமுளரி

நாண்மலர்ப்பாதமென் சிரமேலணிந்திட்ட
ராமயாதினு நிறைந்த

தாரகப்பரம்மமே குவலயாபீடமத
தந்தியின் மருப்பொடித்த

தண்டுழாய்மாதவா கருவிகரணங்கொய்த
தாசருள மகலாதவா

தீரதத்துவமுள முராரீயெனக்குனது
திருவடிப் பதுமம்வந்து

சித்திக்கவருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாக மாலே. (14)

வனவாசமஞ்ஞாத வாசம்பன்மூன்றுகி
மச்சவளநாடகன்று

மண்டலமதிக்கும்ப்ர தாபபதிவிரதையொடும்
மதிமிக்கதுணைவரோடுங்

கனராஜர்புடைசூழ உவலாவியத்துற்ற
காலையத்தருமனேவக்

கடவுளரும்ஞானியரும் நான்குவேதமுமினங்
காண்பதற்கரிதாகிய

நினதுபயபதமுளரி மலர்சிவப்புறவரவ
நெடியதுவசம்படைத்த

நிருபன்மாநகர்மீது விரைவொடுதிருத்தூது
நெஞ்சங்கனிந்துசென்ற

தினகரனையொத்தசெஞ் சுடராழிபெற்றவசு
தீதவனின்னபயமுத்தி

சித்திக்கஅருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதரதடாகமாலே. (15)

ஞானகிவசீரனே கவுசலேகுமாரனே
தசாதன்றருசூரனே

தாணிதரும்வேதனைத் தந்தஜெகாதனே
தாமரைமலர்ப்பாதனே

வானவர்சகாயனே ராதாவினேயனே
மறைபொழியும்மலர்வாயனே

வரிசிலைகுழைத்தோய் வசந்தனையழைத்தோய்கல்
மாதாகவரவழைத்தோய்

மீனமைபன்றிநர சிங்கவாமனமாகி
விற்பரசுராமனுகி

வெற்றிரகுராமனுடு பலராமன்வசுதேவன்
விஜயகற்கியுமாகிய

தினரக்ஷகவெனது குற்றம்பொறுத்தேம
தெண்டனைவிலக்கிவிடு

சித்திக்கஅருள்செய்வாய் அத்திக்குமுன்வந்த
சீதாதடாகமாலே. (16)

இராகவ தடாகப் பஞ்சரத்தினப்பா.

சக்கரம்புலவுவடி வாளாயுதாகரத
சராசனுபாஞ்சசன்யா

சதுர்மறைகளாலும் தெரிந்தின்னவிதமென்று
சாற்றரியதத்துவத்தாய்

சர்ப்பகாளியன்முடியும் அழகுகாளிந்தித்
தடங்கரையுந்தியினறலும்

சந்ததமுமேமணம் பரிமளிக்குஞ்செபூந்
தாமரைப்பொற்பதத்தாய்

கைக்குள்வளர்நெல்லியங் கனியேமெய்ப்படியவர்
கருத்தையகலாதகண்ணை

கனிவுகொடுகோகுல பிருந்தாவனத்திலங்
கன்றுமேய்த்திடுமாதவா

கடல்வண்ணமணிவண்ண துளபசூடியபுயா
கனகமாமணிமவுலியாய்

கயமிசைகராசல மழைப்பவந்துற்றவா
கங்கைபாதத்துற்றவா.

மைக்குவளைவிழிமாது சாதாமணிகரா
வரிவிலவளைத்துமிதுலை

மகராசன்மகளைமண மாலைசூடியசக்ர
வர்த்திதிருவரபாலகா

மறலியுலகம்புகும் வசந்தனையழைத்தவா
மன்னுயிரெலாந்தந்தவா

வாரிதிகடைந்தமு தளித்தவாவமர்கள்
மனக்குறையெலாந்தீர்த்தவா

அக்குமாலிகைதும்பை அரவமாலிகைகங்கை
அம்புலிகடுக்கைமாலை

ஆத்தியுஞ்சூடும்வட கயிலைநாதற்குமுனம்
யாசித்தலைத்தவிர்த்த

ஆழியாய்வாழிநீ டூழிகாலமுமெனையுன்
னடியிணையில்வைத்தாளுவாய்

ஆகமங்கிளிபேசும் ராகவதடாகம
தமர்ந்தபைந்துளபமாலே. (1)

வண்டனிரணியனிரணி யக்கணனிராவண்ணன்
வலியிலுயர் கும்பகருணன்

வரமிக்கசிசுபால னெடுகஞ்சனெனும்வஞ்ச
மறுவலார் யாவருக்கும்

வளையாதமுடிதத்வ ஞானசம்பன்னவிது
ரற்காய் வளைத்துரூபு

மலையனேபுயதரிச னந்தகடவுளே
மலருறையும் மங்கைமார்பா

கொண்டனிறமேனியாய் வசுதேவரருளிய
குழந்தாய் அசோதைபுத்ரா

கோகனகமலர்வேத னேப்பெற்றவாசரச
கோவலா சத்யபாமை

கொழுனுமெய்யன்பருள மெப்போதுமகலாத
குலமணி விளக்கேபெருங்

குற்றம்பொருத்தென்னை முற்றும்புரக்குமுயர்
கொற்றத்துழாய் மவுலியாய்

பண்டைமறைகட்கரிய முண்டகப்போதனைய
பரிசுத்தமா பலிதரும்

படிவைத்தபதமெனது முடிவைத்தவாபரம
பதம்வைத்த தின்னதன்பர்

பால்வைத்திடப்புத்தி மால்வைத்திடாதெதன்
பச்சைப் பரந்தாமனே

பரவைசூழ்படியிடை பிறந்தும்மிறந்தும்
படுந்துயரகற்றி யாள்வாய்

அண்டர்கோவருளுமுத் தண்டகெம்பிரவர்ச்
சுனராசனுக் கமைந்த

அனுமதுவசத்தேரி லமரும்வலவாதேவர்
யாவர்க்கும் மாவல்லவா

அத்தினபுரத்தரசை யைவர்க்களித்தவா
ஆண்டவா யெனையாளுவாய்

ஆகமங்கிளிபேசும் ராகவதடாகம
தமர்ந்தபைந் துளபமாலே. (2)

தெண்டிரைகடைந்தமுதை அண்டருலகத்தவர்
தெவிட்டவுண்ணக் கொடுத்த

தேவாபொன்முளரிநதி சூழும்தூற்றெட்டுத்
திருப்பதியினும் பாற்கடம்

நிருவொடுநடஞ்செயும் தருவனயகரதலா
தெய்வீக மாணிக்கமே

தேவகுமரா விலக்குமிவசீரா
திடத்த ராவணசமாரா

பண்டரிபுரத்தவா தொண்டரிதையத்தவா
பண்டைமறை யறியாதவா

பைம்பொன்மாமவுலியாய் பைந்துவரையாய்விடப்
பனகசயனப் பள்ளியாய்

பச்சைமேனிப்பரந் தாமாவெனிரவிகுல
பீர கோதண்டராமா

பணிமிசைநடித்தவா தழலதுகுடித்தவா
பாருண்ட வாபாரதச்

சண்டைபதிஞலிலே சிந்துராஜன்முரு
சயத்திரதன் மகுடமுடியைச்

சக்கரத்தாலிர வழைத்துவிஜயன்கைக்
தனுச்சரத்தால்வெட்டிய

சாதிஇமாரதி தனக்குரூதன்றந்த
தாசரதி பாசபந்த

சாகரத்திடைதிரியும் நாயினுக்குபயபத
தாமரைப் போதருளிநின்

அண்டைவைத்தாள்வையோ வடமதுரைவிட்டு முகை
மாயர்பாடியில் வளர்ந்த

ஐயாகவுத்வமணி மெய்யாதிருத்துள
வணிந்த சிங்காரதுய்யா

ஆரணுவாரண மழைக்கவவசியம்வந்த
வச்சுதா பஞ்சாயுதா

ஆகமங்கிளிபேசும் ராகவதடாகம
தமர்ந்தபைந் துளபமாலே (3)

தெண்டிரைகடைந்தமுதை அண்டருலகத்தவர்
தெவிட்டவுண்ணக்கொடுத்த

தேவாபொன்முளரிநதி சூழுநாற்றெட்டுத்
திருப்பதியினும்பாற்கடற்

றிருவொருநடஞ்செயும் தருவனயகரதலா
தெய்வீகமாணிக்கமே

தேவகிகுமாரா விலக்குமிவசீரா
திடத்தராவணசமாரா

பண்டரிபுரத்தவா தொண்டரிதையத்தவா
பண்டைமறையறியாதவா

பைம்பொன்மாமவுலியாய் பைந்துவரையாய்விடம்
பனகசயனப்பள்ளியாய்

பச்சைமேனிப்பரந் தாமாவெனிராவிகுல
பாரகோதண்டராமா

பணிமிசைநடித்தவா தழலதுகுடித்தவா
பாருண்டவாபாரதச்

சண்டைப தினுவிலே சிந்துராஜன்றரு
சயத்திரதன்மகுடமுடியைச்

சக்கரத்தாலிர வழைத்துவிஜயன்கைத்
தனுச்சரத்தால்வெட்டிய

சாரதீமாரதி தனக்குநாதன்றந்த
தாசரதிபாசபந்த

சாகரத்திடைதிரியும் நாயினுக்குபயபத
தாமரைப்போதருளிநின்

அண்டைவைத்தாள்வையோ வடமதுரைவிட்டுமன
மாயர்பாடியில்வளர்ந்த

ஐயாகவுத்வமணி மெய்யாதிருத்துள
வணிக்தசிங்காரதுய்யா

ஆரணவாரண மழைக்கவவசியம்வந்த
வச்சுதாபஞ்சாயுதா

ஆகமந்தெளிபேசும் ராகவதடாகம
தம்பந்துபைந்துளபமாலை. (3)

சண்டனேவியகொடிய வளவிலாயமதூதர்
சங்கந்திரண்டிரண்டு

தழல்விழிசிவந்திதழ் மடித்துக்கடித்திளஞ்
சந்திரனையொத்தவக்ர

தந்தம்ப்ரகாசிக்க அந்தகன்கடிதந்
தனைக்கொடுத்தெனையழைக்குஞ்

சமயத்தும்நெடியவடி வேல்விழிமடந்தையர்கள்
சரணதாமரையின்மூட்டி

அண்டர்தருவேதேவர் புத்தமுதமேவெற்றி
யாடவர்துரைச்சிங்கமே

ஆசைமதனுவென்று கதறியழுதனதளத்
தம்புயப்பூவைவாட்டும்

அந்தவேளையினுமற் றெந்தவேளையினுமென
தஞ்சனத்திருமேனியது

ஆழியுஞ்சங்கும்வடி வாளுமகதாயுதமும்
அழகுவில்லுந்துளபமும்

பண்டைவேதமும்நெடிய கங்கையுங்கமழ்பாத
பதுமமும்செம்பொன்மாதும்

பழவடியரினமுமா கருடவாகனமுமிப்
பார்மடந்தையுமுனையர்

பாடிதொறுமுண்டநவ நீதங்கனிந்தொழுகு
பவளசெங்குமுதவாயும்

லைபம்பொன்னுடையுமுயர் கவுத்வமணியுந்தற்
பதத்திலடியாரையேற்றும்

ரண்டுசெங்கரமும்நான் முகனையருளியவுந்தி
நளினமும்வாரிசாத

நாண்மலரையொத்தகிரு வதனமும்நயனமும்
நாயேன் மறந்திடாத

கல்லபோதிவுதந் தெனையாள்வதுன்கடமை
ரக்ஷிக்கா திருராரணை

நாகமிசைபூகமது வேகமுறவளர்விஜய
ராகவதடாகமாலே. (4)

மலரடிதொழுந்தொண்டர் வினைதீரமேனுள்
வராகமாய்வேலைசூழும்

மண்டலமெலாம்பிறைக் கோட்டாலுழுங்கடவுள்
வயகாமமதனினென்றை

வசனிக்குமவர்தேவர் மக்கண்மிருகம்பறவை
மருவுபுன்புழுவினென்றுய்

வரினுரகம்புகா சென்னவில்லிதிருவாய்
மலர்ந்தவாசகம்வேதமே

கலசிவமகோததியில் அழகியதடஞ்சிலையோ
டம்பெலாம்வாரிநன்றுய்

கரனெனும்மாகதப் பருபதத்திடைபொழியும்
நாராயணக்கொண்டலே

நாமமாயிரமுடைய சோமசூரியரனைய
நாதாளன்மீதுவாதா

நந்தாதபதமுளரி தந்தாளவிதுசமயம்
நம்பினேன்வீடருளுவாய்

மலைநெடுங்கவிகைகொடு சுரபிமுன்காத்தவா
மாபெருங்கரியகல்லே

மாதாயழைத்தவா வேதாவையருளுமா
மாயவா ஆயமாதர்

வனைதுகிலும்வரிவளையும் மனமுங்கவர்ந்தவா
வலியபேய்முலையுண்டவா

வனவேடனைப்பரம் பதமீதுவைத்தவா
வைகுண்டநாடுடையவா

அலருறையும்மடமங்கை புவிமங்கைமுதலாய
அஷ்டலக்ஷ்மிமங்கையும்

அணையும்நேசாபெரிய துவரைவாசாகரிய
அழகுமேனிப்ப்ரகாசா

அண்டபுவனங்களையு முண்டவாயாளங்க
ளவர்பாண்டவர்சகாயா

ஆகமங்கிளிபேசும் ராகவதடாகம
தமர்ந்தபைந்துளபமாலே. (5)

திருவரங்கப்பதிகம்.

கோலமலர்மடுவிலே ஓலமிடுமொருகரட
குஞ்சரம்பண்டுய்யவும்

கொடுமுதலைபொடிபடவும் நெடியசெஞ்சுடராழி
கொண்டிடர்தடிந்தமாலே

நிலமேகாஅருள் விசாலயோகாகடல்
நிகர்த்தகாயாவின்வாகா

நெடியசீதாதழுவும் உயர்சமேதாவிரைவில்
நெடுநிலமளந்தபாதா

காலதூதுவர்வந்து வளையாமலுந்தாய்
கருப்பைக்குள்நுழையாமலும்

கரமலர்கொடயனெனது தலைபிலெழுதாமலும்
கதியுதவஇதுசமயமே

சாலபந்தந்தடிந் தாள்வாய்பொனதிசூழ்
தட்திருவரங்கமுறையுஞ்

சக்கரம்வணங்குதாள ருக்மணிவிரும்புதாள
சத்யபாமையின்மணுளனே. (1)

மாதாவுரைத்தமொழி தீதாகிடாமல்லில்
மதியாதயழகுசொர்ன

மணிமகுடகேயூர கவசகுண்டலபணிதி
மாற்றிமரவுரிதரித்துச்

சீதாபிராட்டியொடும் இளையதம்பியும்நடிய
சிலையும்வடிசரமுமாகத்

திருவுளங்கனிவுகொடு கானிடைநடந்திடி
சிவந்திடுமுயர்ந்தபுனிதப்

பாதாரவிந்தமது தருவையோளனதிதைய
பங்கையாதனசீதரா

பழமறையினன்தேடி யறியொணுமாதவா
பரமபாகவதர்பரவும்

தாதாளவ்வுயிர்கட்கும் நாதாபொனதிசூழ்
தடந்திருவரங்கமுறையுஞ்

சக்கரம்வணங்குதாள ருக்மணிவிரும்புதோள
சத்யபாமையின்மணுளனே. (2)

அத்தினபுரத்திலே யரசரவைநடுவிலே
அரவுயர்த்தவனேவலால்

அட்டகாசமும்விண்ட கெட்டநட்டனேகொண்ட
அதர்மமிகுதுர்ச்சாதனன்

சத்தியம்நிறைந்தவுயர் பஞ்சவர்திருத்தேவி
தருமபத்தினிபுனைந்த

தடந்துகில்முனந்தொட வளர்ந்திடினம்பெருந்
தயைபுரிந்தருள்முகுந்தா

சத்துருமுடித்தலை துடித்துருளமுற்போரு
தனுக்கைவிஜயற்கனுமடால்

தத்தியசுவேதநிற முற்றஅசுவத்தையிர
தத்தொடுநடத்துமாலே

தத்துவந்தேர்ந்தமெய்த் தொண்டரொடுசேர்ப்பையோ
தண்திருவரங்கமுறையுஞ்

சக்கரம்வணங்குதாள ருக்மணிவிரும்புதோள
சத்யபாமையின்மணாளனே. (3)

நான்மறையின் முடியேறி யுயரண்டமுகடேறி
நதிபதியிலங்துசென்னி

நாகபடமீதேறி வடமேறியன்பருள
நளினநாண்மலரிலேறித்

தேன்மொழிக்கோபியர்கள் துகில்கொடுருந்தேறி
ஸ்ரீவைகுண்டத்திலேறித்

தெய்வப்பருந்தேறி நந்தகோபாலன்வளர்
திருமனையிலேறிராதா

மான்மனையிலேறியினம் யாதவமடந்தையர்கள்
மனகடொறுமேறியுறியில்

வளையேறுமதரத்தில் அளையேறவுண்டெனது
மனதேறினின்றெங்களுந்

தானுகும்நீயென்னை யாள்வையோநதிசூழ்
தடந்திருவரங்கமுறையுஞ்

சக்கரம்வணங்குதாள ருன்மணிவிரும்புதோள
சத்யபாமையின்மணாளனே (4)

மானுகவந்தமா ரீசனேவனத்தூடு
மடியவுடலொடியமடிய

வரிசிலேபிடித்துமவ னுயிர்துடிதுடித்துவிழ
வடிவாளிதொடும்ராகவா

காணுடைழுந்தகர தூஷணன்றிரிசிரா
கசரதுரங்கதானைக்

கடலொடுங்குடல்சரிய வாலியுரம்நெரியவுயர்
கார்முகம்வளைத்தகையா

வானுடர்வந்தடி வணங்கும்ராவணனைமுனம்
மாட்டிமணவாட்டிசீதை

மாதுசிறைமீட்டியவ னிளையதம்பிக்குமணி
முடிசூட்டிவைத்ததுரையே

தானுவிரும்பியெனை யாள்வையோநிகும்
தடந்திருவரங்கமுறையும்

சக்கரம்வணங்குதாள ருக்மணிவிரும்புதோள
சத்யபாமையின்மணாளனே. (5)

மச்சமாகியும்நெடிய கூர்மமாகியுமுயர்
வராகமாகியும்வெற்றிசேர்

மனுடகோளரியெனவு மொருதிறியகுறளெனவும்
மாபரசுராமனெனவும்

இச்சகம்வணங்குரகு ராமனெனவும்புக
ழிலங்குபலராமனெனவும்

இருநிலம்பரவுவசு தேவனெனவுங்கற்கி
யெனவும்லீலையாடல்புரியும்

வச்சிரவலம்புரி முழங்குசெந்துவர்வாய்
மணிப்பைந்துழாய்மாதவர

மரணஜனனங்களெனும் வாரியிலழுந்தாதுன்
மலரடியில்வைத்தாளுவாய்

சச்சிதானந்தபர தெய்வமேநிகழ்
தடந்திருவரங்கமுறையும்

சக்கரம்வணங்குதாள ருக்மணிவிரும்புதாள
சத்யபாமையின்மணாளனே. (6)

சகஸ்திர திருநாமப்பா.

பஞ்சாயுதாபச்சை வடிவுதங்கியபரங்
தாமாஅருச்சுனர்க்குப்

பரிகடாவிடுமிரத வலவாதுவாரகைப்
பதிமுகுந்தாதேவகி

பாலகாமணிமகுட வசுதேவரருள்புத்ர
பாக்யமேமகௌசலேசுதா

பதுமநாபாஅரிமுராஹரிநராஹரி
பண்டரிவசிக்குமாயா

கஞ்சமாமடுவில்முன மோலமிடும்யானையைக்
காத்துக்காராவைவென்ற

கண்ணுதிரண்டமணி வண்ணுகளாகினுங்
கடலினுங்காயாவினுங்

கரியவாமறைகடே டறியவாவடியவர்க்
கெளியவாகமலநயனு

கபிலவிடைகன்றுயப் பருபதமேடுங்குடை
கவிழ்த்தவாமாமனேவுங்

குஞ்சரம்பூதமிணை மருதுசகடமும்விழக்
கொன்றவாவுரலின்மீது

குந்தியவரவர்வைத்த வெண்ணெய்பால்தயிர்கொள்ளை
கொண்டுண்டுநந்தகோபன்

குலமினியசோதையிரு கண்களிப்பத்திருக்
கூத்தாடும்நெடியமாலே

கொடியபாதகனெனைக் கடையனெனைநாயினுங்
குறைவானவெனைவேற்படை

நஞ்சனையவிழிமினுர் விரகசன்னதவலையி
னண்ணிடாதுபயபாத

நலினங்கொடுத்தாள வருவையோபாற்கடலி
னடுவினெடுமுடியாயிர

நாகபஞ்சணைமீது யோகநித்திரைசெய்யும்
ராகவாசிதகொஞ்சும்

ராமாசகஸ்ர திரு நாமாயுனக்கபயம்
நாராயணைசரணமே. (1)

தவமுனிமகத்தினை யழித்ததாடகைமுடி
தடிந்தவள்சுதன்சுவாகு

தலையினையுருட்டி மிதுலாபுரிச்சனகனுள்
தையலைமணம்புரிந்து

தரணிமுற்றுந்தம்பி யாளக்கொடுத்தன்னை
தந்தமரவுரிதரித்துத்

தக்கவனிலக்குமி யிலக்குவன்வடிக்கணை
தனுக்கொடாரண்யமேகிச்

சவரிதருகனியுண்டு குகனைநட்புக்கொண்டு
கருநந்தமூலமுண்டு

சத்துருவிராதனுயி ருண்டுலங்கேசனுயர்
தங்கையின்சிச்சைதண்டு

சமரடுகரதூஷ ணன்றிரிசிராமுடி
தகர்த்தவர்தளத்தைவென்று

சாலமாய்வருபொய்மா ரீசனைக்கொன்றுயர்
சடாய்வுக்குமோட்சநல்கி

நவையுறுகவந்தனே வதைத்நதுமசுக்ரீவ
ராஜநேசம்பிடித்து

நலமராமரமேழும் வாலிமார்பமுமுருவ
நகைவடிசரங்கடாவி

நயமிகுந்திருவாழி கொண்டனுமனுந்தூது
லங்கைபோய்வந்தபின்னர்

நண்ணலன்றம்பிவீடண்ணனையும்லங்கைக்கு
ராஜனுய்மவுலிசூட்டி

நவமுகின்முழக்கமென வானராதிகள்சூழ
நதிபதிகடந்திலங்கை

ராவணனைவென்றெமது தாய்சிறையைமீட்டியடி
நம்பும்சுபர்க்காதிபர்

நடுக்கந்துடைத்தோய் இடுக்கந்துடைத்துனது
நளினபாதந்தருவையோ

[illegible]னக்கபயம்
நாராயணசரணமே (2)

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
32	2	கொற்றமேரிட	கொற்றமேறிட
33	4	புருவம்பொன்	புருவஅம்பொன்
38	11	எனதிதையத்	எனதிதைய
45	4	மறுவலார்	மருவலார்
62	15	ராமாயுனக்	ராமாவனக்
64	15	ராமாயுனக்	ராமாவனக்